# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

(பதிவு எண் : 982 / 2012)

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி கல்வி

ஜுலை - டிசம்பர் 2019



கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்

உலகளவில், இந்தியாவானது அதிக இளைஞர்களைக் கொண்ட நாடாகத் திகழ்கின்றது. அமெரிக்கா, சீனாவை அடுத்து இந்தியாவில் தான் மிகப்பெரிய கல்வியமைப்பு முறை இருக்கிறது. இளைஞர்கள் அனைவருக்கும் உயர்கல்வி கிடைக்கச் செய்வதால் நாட்டின் பல்வேறு வளர்ச்சிக்கும், தனிநபர் வருமான உயர்வுக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் வழிவகை காண முடியும். பள்ளிக் கல்வியில் இந்தியா முன்னேற்றம் அடைந்திருந்தாலும், குடும்ப வறுமையின் காரணமாக ஏராளமான மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரமுடியாமல் இருக்கின்றனர். நமது வேலூர் மாவட்டம் உயர்கல்வியில் முன் மாதிரி மாவட்டமாக விளங்க வேண்டும், அதோடு நம்முடைய மாணவர்கள் அனைவருக்கும் உயர்கல்வி கொடுப்பதில் வெற்றி பெற்று, இந்தியாவில் உள்ள மற்ற மாவட்டங்களுக்கும் ஒரு முன் மாதிரி மாவட்டமாக மாற்றப்பட வேண்டும் என நான் விரும்புகிறேன். நமது வேலூர் மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்த அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி பயில வாய்ப்பு வழங்க வேண்டும் என்னும் சமூகப் பொறுப்புணர்வுடன் கடந்த 2012 ஆம் ஆண்டு **அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை** தொடங்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

## "HEARTS" (Higher Education for All to Realize Transformation of the Society) திட்டம்

இத்திட்டத்தின் மூலம் வேலூர் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கக்கூடிய ஜவ்வாதுமலை ஒன்றியத்துக்குட்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் +2 முடித்த பொருளாதார வசதியில்லாத 6,684 மாணவர்கள் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் பொறியியல் மருத்துவம் கலை மற்றும் அறிவியல் உள்ளிட்ட பாடப்பிரிவுகளில் தங்குதடையின்றி படிக்கக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 6 கோடியே 56 இலட்சம் ரூபாய் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவித்தொகை பெற்றவர்களில் 3 இல் 2 பங்கு பெண்கள் என்பது குறிப்பிடதக்கது.

## "ASPIRE" (Action to Support Poor students In Reaching Excellence) திட்டம்

இத்திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்கள் உயர்கல்வி பயில வாய்பாக ஒவ்வொரு மாணவர்க்கும், ஒரு கல்விக் கொடையாளரை அறக்கட்டளையின் மூலம் இணைக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி....

- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களின் உயர்கல்விக் கட்டணத்தை ஏற்கலாம்.
- தங்களுக்குத் தெரிந்த கல்லூரியில் தங்களின் பரிந்துரையின் பேரில் மாணவர்களுக்குக் கட்டணம் இல்லாமல் படிக்க உதவி செய்யலாம்.
- தங்களுக்குத் தெரிந்த (அ) தாங்கள் பணிபுரியும் நிறுவனத்தின் மூலமும் நிதியைப் பெற்று அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கலாம்.

(மேலும் கொடையாளர்கள் தங்களால் இயன்ற நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்கலாம்).

ASPIRE-திட்டம் பற்றிய காணொளியைக் காண QR Code-யை SCAN செய்யவும்

## கல்வி உதவித்தொகைக்கு மாணவர்களைத் தேர்வுசெய்தல்








2019-2020 கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகைக்கு வேலூர் மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த மாணவர்களுக்கு நேர்முகத்தேர்வானது வேலூர் மாவட்ட (அரக்கோணம், ஆற்காடு, காட்பாடி, கே.வி.குப்பம், குடியாத்தம், வாணியம்பாடி மற்றும் திருப்பத்தூர்) ஆகிய ஏழு பகுதிகளில் நடைபெற்றன. நேர்முகத் தேர்வு நடைபெற்ற இடங்களில் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து மாணவர்கள் வரவழைக்கப்பட்டு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. மேலும் மாணவர்களின் குடும்பப் பொருளாதார நிலைமையை அவர்களின் வீட்டுக்கு நேரடியாகச் சென்று தகவல் சேகரிக்கபட்டுத் தகுதியான மாணவர்கள் தேர்வுசெய்யபட்டனர்.

## கல்வி உதவித்தொகை வழங்குதல்



2019-2020 கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி கடந்த டிசம்பர் 31 அன்று வேலூர் விஐடி வளாகத்தில் உள்ள அண்ணா அரங்கத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ. டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராகச் சென்னைப் பல்கலைக்கழக மேனாள் துணை வேந்தர் டாக்டர். ரா. தாண்டவன் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கிச் சிறப்புரையாற்றினார். விழாவில் 1,537 மாணவ மாணவிகளுக்கு 85 இலட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

அறக்கட்டளை செய்தி நாளிதழ்களில்



## ஆளுமை மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி

கல்வி உதவித்தொகை பெற்று உயர்கல்வி பயிலும் மாணவர்கள், பெரும்பாலும் கிராமப்புற மற்றும் முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்கள் என்பதால் அவர்களுக்கு உடல் நலம், ஆளுமைத்திறன் மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான தன்னம்பிக்கைப் பயிற்சிகளை வழங்கி வருகிறது. கடந்த டிசம்பர் மாதம் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் சார்பாக கல்வி உதவித்தொகை பெற்று இறுதியாண்டு படிக்கும் ஆம்பூர், வாணியம்பாடி மற்றும் திருப்பத்தூர் பகுதிகளில் படிக்கும் மாணவிகளுக்கு, அறக்கட்டளை சார்பாக வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோருக்கான வழிகாட்டுதல் பயிற்சி வழங்கிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



## தகவல் தொழில்நுட்பத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி

அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையும், தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி நிறுவனமான சென்னையில் உள்ள ஆஸ்பயர் சிஸ்டமும் இணைந்து வேலூர் மாவட்டத்திலுள்ள பட்டதாரி மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பத் துறையில் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு வழங்குவதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி ஆறாவது பகுதி மாணவர்களுக்கு விஐடி வளாகத்தில் கடந்த ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை நான்கு மாதம் பயிற்சி அளித்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தற்போது பயிற்சி முடித்த மாணவர்கள் மென்பொருள் பொறியாளர்களாக தகவல் தொழில்நட்பத் துறையில் பணிபுரிகின்றனர்.



## அறக்கட்டளை உறுப்பினர்கள்



## கல்வி உதவித்தொகை பெற்றவர்: 6,684

- இவர்களில் 4,392 (65.71%) பெண்கள்
- 4,558 (68.19%) முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்கள்
- 6,256 (93.59%) கலை மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் செவிலியர் படிப்பு படிக்கும் மாணவர்கள் அதிகமாக பயன் பெற்றிருக்கிறார்கள்
- 6,107 (91.37%) மாணவர்கள் அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்றவர்கள்
- 16.07% தாய்/தந்தை இழந்த மாணவப் பயனாளிகள்
- 81.58% மாணவர்கள் +2 இல் 80% க்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்கள், அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் மட்டுமின்றி, குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கும் அறக்கட்டளை, முக்கியத்துவம் அளித்து அவர்களின் பொருளாதாரச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு உதவி வருகிறது
- இதுவரை 2,755 மாணவர்கள் இளங்கலை பட்டப்படிப்பை முடித்துள்ளார்கள், இதில் 917 மாணவர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்
- 507 மாணவர்கள் முதுகலை படிப்புகளில் சேர்ந்து பயின்று வருகிறார்கள்



இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்று தங்களது வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஒரு ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

### முகவரி


திட்ட இயக்குநர்,
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்:215, டாக்டர். எம்ஜிஆர். பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : **0416 - 224 7777, 220 2196**


### வங்கி விவரம்

**Universal Higher Education Trust (UHET),**
A/C. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore Dt. - 632 014.
Swift Code : IDIBINBBTSY
IFSC Code : IDIB000V086

இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!
மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!